ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1987/41 - 2016 ඔක්තෝබර් මස 07 වැනි සිකුරාදා - 2016.10.07
*1987/41 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டம்**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 43 ஆவது உறுப்புரையின் (1) ஆவது உப உறுப்புரைக்கமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு என்னால் 2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அவ்வப்போது திருத்தப்பட்ட அறிவித்தல், 2016, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி தொடக்கம் அமுலாகும் வகையில் கீழ்க்குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மென்மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 01,
2016, செத்தெம்பர் 30.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சு (இல. 33) என்ற தலைப்புத் தொடர்பில் கீழ்க்குறித்தவாறு :-

(அ) அதன் III ஆவது நிரலின் "இலங்கை துறைமுக அதிகார சபைச் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க )" என்பதை அடுத்து பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் :-

"படகுக் கட்டளைச் சட்டம் (1900 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க)".

10- 1093


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.